106

வ

கணபதி ணை.

வைத்தீஸ்வர ன்கோயில் என்று வழங்கும்

புள் ளிருக்கு வேளூர்.

ஸ்ரீ வைத் தீஸ்வரர் பதிகம்.

ஸ்ரீ தயனாயகியம்மன் பதிகம்

ஸ்ரீ முத்துக்குமாரசாமி பதிகம்.

இ மூன்றும் அடங்கியிருக்கின்றன.

இவை

ஷை , மகா-ா-ா-ஸ்ரீ முருகேசதாசர் என்னும்

வ. சாமிநாதகவிராயரவர்கள்

இயற்றியவை

சிதம்பரம் புஸ்தக வியாபாரம்,

சா. கோவிந்தசாமிபிள்ளை அவர்களா

பிரசுரிக்கப்பட்டது.

1930 [அணா

Q23:417
N30 .
188235

உ

திருச்சிற்றம்பலம்.

புள்ளிருக்கும்வேளூர்

வைத்தீஸ்வரர் பதிகம்.

காப்பு.

வெண்பா

புள்ளிருக்கும்வேளூர்ப் புகழ்வைத்தியேசுரன்மேற்
றெள்ளியசீர்நற்பதிகம் செப்பமுதள் — வள்ளலெனும்
அத்திமுகத்தோர்கொம் பனைந்துகானல்வாயான்
கத்தன்மலர்ச்செஞ்சரணங் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

அரியயனுனதினடி முடிதேடியறிந்திடா தமர்ந்தசங்கானே அலமுண்டவனே மாவமழுவேந்துமாதியே பூதவாகனனே திரிபர மெரித்த சூலபாணியனே சேவகர்கள் பணிநாயகனே திங்கள் சூடியனே கங்கைவேணியனே திரியம்பகச் சோதியானவனே கரி யுரித்தவனே கபாலருத்திரனே காமனையெரித்த வித்தகனே கால னையுதைத்த கைலைவாழ்பரனே கத்தனே யத்தனே சிவனே வரம ருள் வேளூர்த் தையனுகியை மருவிய வைத்தியநாதா வல்வினை யோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பை புரிவாயே. 1

தினமுனைப்பணிந்து துதிக்கவுமறியேன் றியர்கணையமதாகிச் செகதலமெகுந்திரிந்தலைந் துழன்று தீவினை மேவிடச்சலித்து மன துகலங்கி மதிமிகமயங்கி வறுமையால்வாடி மெய்தளர்ந்தேன் மறு வினைய தட்டிவாந்தனைப்புகட்டி மட்டிலாக்கருணையே புரிவாய் அனந்தஞானியனே சிறந்தபூதியனேயம்பலத்தாடியவரனே அரகர சிவனே வரம்புரிபவனே யப்பனே யொப்பிலாதவனே மனமகிழ் வேளூர்த்தையனுகியை மருவியவைத்தியநாதா வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பைபுரிவாயே. 2

126235

பதறியேயுலகை யெனக்களிப்பதுவும் பார்த்தன்மேல் வில்லெடுப்பதுவும் பாலனைக்கொன்று கறியிடச்சொல்லவும் பாரினிலிவ்வதிகாரம் சதிருடனுக்காளித்தவானே சஞ்லக்கலக்கமேயகற்றத் தான்செயலில்லையே கோபமோவறியேன் தயவுடன்மனக்கசப்பதனைச் சிதறவேயடித்து மதுரமேகொடுத்துன்சீரருள் பக்தர்கள் தாதா தேவர்கணாகா காளியின்வாதா செகமகிழ் நடனவிநோதா மதிதவழ் வேளூர்த்தையனாகியை மருவியவைத்தியநாதா வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பைபுரிவாயே 3

தாரணியினானாய்ச் செனனமதெடுத்துச் சற்குணந்தன்னையும் விடுத்து சங்கடத்தொழில்கடன்னையேவிரும்பி சபலனாய்த்திரிந்தலைந்துழன்றேன், பரமனேயடியேன் பவமதுதீர்த்துப் பல்பிணிகளையுமேயகற்றிப், பதசரோருகத்தைப் பணிந்திடத்தயவுபார்ப்பதெப்போதருள்புரிவாய், அரவுடனறுகு தும்பையுந்தரித்த வப்பனே யொப்பிலாமணியே, அரகரசிவனே கரியுரித்தணிந்த வனாதியாய் நின்றதற்பரனே, வரமிகுவேளூர் தையநாயகியை மருவிய வைத்தியநாதா-வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பை புரிவாயே. (4)

பரிவுடனோட்டை யேந்தியேபிச்சைப் பாரினிற் றிரிந்திரந்தும்-பண்டுகோளாகனா மளித்திடவெச்சில் பருகியுரவயற்றினிற்குறைவாய்ப், பிரியமாய்ப்பிட்டைத் தின்னமண்சுமந்து பிரம்படிப் பட்டுநீர்பிழைத்த பெருமையைப்போலே யெண்ணியேயிருந்தால் பேதைநான் பிழைப்பதெப்படியோ, அருமையை யறிந்து மௌனமாயிருப்பதழகலவுமக்கிதுவையா, அல்லலையகற்றிச் செல்வமேயளித்திங் கன்புடனென்னையாளையா, மருநிறை வேளூர்த் தையநாயகியை மருவிய வைத்தியநாதா-வல்வினை யோட்டி நன்மருந்தூட்டி வசீகரக் கிர்பை புரிவாயே. (5)

உந்தனுக்கடிமை யாகிநானிருக்க வுவந்துநீ வராதிருக்க வூழ்வினைநோயும் வருமையும் பெருக்க வுலகினிலெவர்களும்பழிக்கத், தந்தைதாய்சலிக்கக் கண்டபேர்நகைக்கத் தமியனுந் தயங்கியே தவிக்கத், தமக்கடமோவென் சஞ்சலத்துயரைத் தவிர்க்கவுமுனக்கிதுவரிதோ, எந்தனைக்காக்க நினதுளமுவந்தே னிருவினை நீக்கிடவருவா-யீசனே வுமைபா னேசனேகலைக் கிறைவவுல்லா

சனே நமனும், வந்திடாவேளூர்த் தையநாயகியை மருவிய வைத்தியநாதா-வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக் கிர்பைபுரிவாயே. (6)

அல்லுமே பகலுந் தையலைத்துதித்தே யவடுணை யென்றுமே யிருந்தேன், அவளுமென் றுயசைய றிக்கையிட்டுன்பாலடைவுடன் சொலவரிதாச்சோ, வல்வினையனைப்போன் மகனையீனுத மலடியோமன்து கல்லாச்சோ, வர்மமென்மேலே வைத்துநின்றனளோ மனமகிழ்ந்துனக்கவள்சொன்ன, சொல்லைநீமறந்து தோன்றிடாதென்மேற்சூதிநான்மதிப்பிசகாச்சோ, சூதையும்விடுத்து மாதுமை மகிழத் துயர்பறித்தருள்புரியையா, வல்லியாள் வேளூர்த் தையநாயகியை மருவி யவைத்தியநாதா - வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக் கிர்பைபுரிவாயே. (7)

ஆதரவெனக்கா ரென்றனுக்குன்னை யல்லதோர் தெய்வமுமுண்டோ, ஆகையாலுனையேநம்பினே னென்கிறனருந்துயர் தன்னையே தவிர்ப்பாய், மாதன்முராரியச்சுதானந்தன் மாயவன் சிதரனெடியோன், மச்சனற்கூர்மன் வராகவதாரன் மலருறைதிருமகள் கொழுனன், சோதரிபூக வராகிநீ வராகி சுந்தரி பார்வதி பங்கா சுந்தரன் றாதா கங்கையாணுகா தூக்கியே நடித்திடும் பாதா, மாதெனும் வேளூர்த் தையநாயகியை மருவிய வைத்தியநாதா - வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக் கிர்பைபுரிவாயே. (8)

பஞ்சமாபாவஞ் செய்துநானிந்தப் பாரினிற்செனனமெடுத்துப், பலவகைப்பிணியை மிகவனுபவித்துப் பஞ்சையாய் மனதுநொந்தலைந்தேன், வஞ்சகப்பிணிக ளினிப்பெறேனையா வருத்தமதனைத்தையுந் தவிர்த்துன், மலரடி தினமும் பணிந்துநானிருக்க வாமது மகிழ்ந்துநீவருளாய், நஞ்சணிகண்டா நடனப்ரசண்டா நரிபரிசெய்தவுத்தண்டா, நாகவாபரணா பதினெண்புராண நந்திவாகன வொளிசரண: வஞ்சியாவேளூர்த் தையநாயகியை மருவிய வைத்தியநாதா-வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக் கிர்பைபுரிவாயே. (9)

பாரினின்மேவு மாலயமெல்லாம் பணிந்துநான்பாடியே சலித்தேன், பரிவுடனென்றன் மிடிபினைத்தீர்த்துப் பலன்றருந் தெய்வ

முமில்லையே, சீரதுவெனக்கு நீகதியல்லால் செகத்தினி லார்தாவல்லால், சிறுமையும் பிணியுஞ் சிதறவேயடித்துச் செழித்திடக் கிருபைபாரையா, தாரணிமகிழ முப்புராதியரைத் தனலெழ நகைத்தெரித்தவனே, சரவணபவனை யருளியவிமலா சர்வஜீவாத்துமஞான வாரியாம் வேளூர்த் தையநாயகியை மருவிய வைத்தியநாதா-வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பைபுரிவாயே. (10)

வையகமெல்லாம் திரிந்துநானங்கம் வளர்க்கவு நாடொறு மயங்கி வாடியானிருக்கப் பாவிநோயுற்றுவாதனையாகவேவருந்தச் செய்கையாலடியே னிடுக்கமே கவிர்க்கத் திக்கெனக் கொருவருமில்லை, சிறுமையும்பிணியுஞ்சிதரவேதுரத்திச் செழித்திடக்கருணை பாரையா, தையலாள்மகிழ வுன்னருடன்னுற் சாற்றுனேன் பதிகமாயிதனில், தமிழ்ப்பிழைபொறுத்தே யடியனீடேறத் தயவுதந் தென்னையாளையா, மையலாள் வேளூர்த் தையனாயகியை மருவிய வைத்தியநாதா வல்வினையோட்டி நன்மருந்தூட்டி வசீகரக்கிர்பை புரிவாயே. (11)

வைத்தீஸ்வரர்பதிகம் முற்றிற்று.

தையநாயகியம்மன் பதிகம்.

காப்பு - நேரிசை வெண்பா.

நீர்வளங்க ளெப்பொழுது நீங்காத வேளூர்வாழ்
நார்வளங்கொ ளெங்கள்தைய னாயகிமேற்-சீர்விளங்குஞ்
செந்தமிழ்ப்பா மாலைசொலச் செல்வக்கணேசனர
விந்தமலர்த் தாள்துணையாமே.

ஆசிரிய விருத்தம்.

திருவளர்ந் தோங்குமதி வதனமுஞ் சுகவருட் டிறம் வளர்ந் தோங்குவிழியுஞ், சீர்வளர்ந்தோங்கு மறைமொழிசொலும் பவள வுச்சிதம்வளர்ந் தோங்குவாயும், உருவளர்ந் தோங்குமணி மருவு குழை யாதியணி யொளிவளர்ந் தோங்குசெவியும், உன்னதம் வளர்ந்தோங்கு கனசுவர்க்கங்களும் உரம்வளர்ந்தோங்கு தோளும், மருவளர்ந் தோங்குபூஞ் சரமும் விண்டருமலரின் மணம்வளர்ந்

தோங்கு தாளும், மைந்தனேன்காண வெள்விடையினின் பதியோடும் வந்தருட் சேவைதருவாய், தருவளர்ந்தோங்கு பொழிலிங்கண்மா மயில்கணிர்ந் தனமோங்கு வேளூரில்வாழ் சையமால் வரைகுமரி வையம்யாவையுமுதவு தையநாயகி கௌரியே. (1)

அருள்பெருகு நயனஸ்ரீங்காரிமதி யணிவேணி யணிமணிப் பூணிவிமலி, ஆனந்தபயிரவி திரிபுராந்தகி சுகிணி யகிலகாரணி நாரணி, மருளறுந் திவ்யத்ரிகோணியம் புஜபாணி மாதங்கி மரகதாங்கி, மந்த்ரபஞ்சாட்சரி மகேஸ்வரி மனோன்மணி மருவுமெய்ஞ் ஞானசீலி, தெருளிலகும் வேதமுடி மீதிலுறும்வித்தகி தீராத வினைகளெல்லாந், தீர்த்தருள் வைத்யநாதன்பங்கிலன்னையே சிறியனேன் வினைதவிர்த்தாள், தாளமணிமுறுவன்மட மாதர்பாலன்ன நடை தான்பயிலும்வேளூரில்வாழ், சையமால்வரைகுமரி வையம் யாவையுமுதவு தையநாயகி கௌரியே. (2)

ஆறெனுந்தைடலை யணிந்தவேணிப்பிரான் கன்றுகுருமூர்த்தியாகி, ஐந்தையலையாதடக்கித் தவம்புரிபவர்க்கவிர் நான்கு தையலைப்பொன், கூறவாவொழியவொளி வீசுமுக்தையலை கொழிக்கு நற்செந்நிமுதலாங், கோலநார் மேவியிரு தையலைப் புறமதிற் கொண்டுமொரு தையலைத்தாந் தேறும்படிசெய்து வெட்டுண்ட கையையுஞ் சீருறத்தந்தவமல, சிவசுப்ரமண்யமுத் தையனைப் பெற்றமாதேவியே எனையாளுவாய் தாறுடைக்கமுகுபூந் தாழையென நீடித்தழைத்துவளர் வேளூரில்வாழ் சையமால் வரைகுமரி வையம்யாவையுமுதவு தையனாயகி கௌரியே. (3)

ஆகமபுராணகலை யோதியறியேன்கருதி வாய்ந்தவகையண்டி யறியேன், ஆனநின்மெய்யன்பர் நேசமறியேனினக் காம்பூசை செய்துமறியேன், தேகமதெடுத்திது வரைக்குநற்கருமங்கள் சிந்தையினினைத்து மறியேன் சிவபுண்ணியஞ் செய்குவோர்கள் பாலொருகாசு செங்கையாலீந்து மறியேன், பாகமுதமொழிநாலார் மோகமேகதியெனும் பாமரிலென்மோலுமிப், பாரிலெவருண்டு நன் மார்க்கநிலையேபெறப் பண்ணுவதுனக்கருமையோ, தாக மூன்றுந்தணந்தோங் குமுனிவரர்கள் வாசஞ்செயும் வேளூரில் வாழ்சையமால் வரைகுமரி வையம்யாவையுமுதவு தையநாயகி கௌரியே. (4)

நாயேன்படுந்துயா மிவ்வளவெனப்பகா நாவொன்றுபோ
தாதுமேல் நாடிவந்தென்குறை யகற்றுவார்நீயலால் நானிலத்
தொருவரில்லை, பேயேனுமொருபோதகங்கரையு நின்னகம்பெரும்
பாரையோ விரும்போ, பெற்றிட்டபிள்ளைமேற் றாய்க்கலோகநா
டொறும் பிரியமதிருக்கவேண்டும், நீயேதுமறியாது போலிருப்
பதுவுமொ ருநியாயமோதயவில்லையே நெஞ்சத்து,நினைவையோ
லணுவுமக மேருவாய நிமிடத்திலாடாதோ, தாயேநின்னாதரவு நம்
பினே னருள்புரிவைதரணி புகழ்வேளூரில்வாழ், சையாமல்வரை
குமரி வையம்யாவையுமுதவு தையநாயகிகௌரியே. (5)

அடுத்தவர்கடம்மையொரு நிமிடமுங்கைவிடா தாண்டரு
ளல் நீதியெனவே, தாகமபுராணகலை தன்னினீ சொன்னதென்ற
றிஞால் கேட்டுமிகவுந் திடத்துடனுனதுபதம் நம்பிவந்தண்டி
னேன் சிற்றயதுருமலினிய, திருவுளமிரங்கியெனை யாதரித்திடுவது
சிறந்தவுன் கடமையலவோ, இடத்துநீரையுமொரு குளத்துநீ
ரென்பரோ குவலயத்துன்னடிமையைக் கூறும்வேறொருவர் தம்
மடிமையென்பார்களோ குணாகரி மகாவித்தகி, தடத்துதிறு மாம்ப
லெழின் மாதர்வெண்ணகைகண்டு தாம்மலரும் வேளூரில்வாழ்
சையமால்வரைகுமரி வையம்யாவையுமுதவு தையநாயகிகௌரியே.

கருணைக்கு வித்தாயிருப்பதுந் துயரைக்களைந்தினிக் குறை
வராமற், காத்தன்பர் தமையிரட்சிப்பதும் பொய்யல்லகருதுநின்
னியற்கைக்குணம், வருணக் கலாபமயில்வடிவுற்ற வல்லியென்
வறுமைபிணி துயரம்யாவும், மாற்றிநித்தியசெல்வம் அருள்வை
யென நிசநான்வருந்திநின் பாலுரைக்க, இருணீக்கு மொளிவயிர
குண்டலமிலங்குசெவியிற் கேட்டிடாதிருத்தல் என்பொலாக்கன்
மமோ ஈதுகலிகாலத்தியற்கையோ வடிமையலவோ, தருணத்தி
லுதவி செய்யாததுந் தகுதியோ தண்ணருள்செய் வேளூரில்வாழ்
சையாமல் வரைகுமரி வையம்யா வையுமுதவு தையநாயகி
கௌரியே.

அன்னையே நீமுனஞ்செய்திட்ட நாலெட்டறந்தனின் மருந்
தென்பதோ, ரறமானதஃதன்றி நின்கணவனும் அடுத்தவர்கள்
நோய்தீர்ப்பரென், றின்னிலமெலாஞ்சொல்ல வில்லடிமையேன்ற
னது இன்னல்நோய் தீர்த்திடாத, தென்னவிதமோ தருமருந்

நினிற்சாரமது மில்லையோ மண்மருந்தோ மன்னுநீ தருமச்சொரூ
பியென்றும் பதிவைத்யநாதீசரென்னும் வாய்ந்தபேர்கொண்டது
வும் ஏதுகாரணத்தினல் வாய்மலர்ந்தருளவேண்டும், தன்னிகரி
லட்டாங்க யோகியர்கள் வந்துதுதிசாற்றுநல் வேளூரில்வாழ்,
சையாமல்வரைகுமரி வையம்யாவையுமுதவுதைபனயகிகௌரியே.

தந்தொடுந் தம்பெரிய தனமதைக்காட்டித் தமக்குரிய பணி
கள் செய்யத் தகுதொழிற்காட்டி மிஞ்சாதடக்கிக்கொடியசங்க
டங்காட்டி மிகவும் வெந்தபுண்ணிற்கோலை யிட்டதைப்போலவே
வீண்வம்புவார்த்தைகாட்டி வீரமுள்ளோர்மனதும் நையும்வகை
செய்யுமைவிழியார்கள்மீதுவாஞ்சை, எந்தவிதமுங்கொளாதுனது
பய சரணமலரிடைவிடா தேத்தும்வாமே; ஏழையேற்கிந்துகாத்
தருள்செய்யவேண்டும் இலங்குநித்யகல்யாணி, சந்தமுறவந்தண
ரும் வந்துநன்மறைகள் சந்ததமோதும் வேளூரில்வாழ் சையமால்
வரைகுமரி வையம்யாவையுமுதவு தையநாயகி கௌரியே. (9)

சுரர்களொரு பாற்போக பூமியர்களொருபாற் றுறந்தமுனி
வரவர்களொருபாற் றுறங்கவிஞ்சையர்களொருபா லசுரரொருபாற்
றுலங்குமந்தரர்களொருபால் சாகரொருபாற் றயித்தியர்களொரு
பாலிசையிலோங்கு காந்தருவ ரொருபால் உத்தம வியக்கரொரு
பாற் சித்தரொருபா லுவந்தகின்னரர்க ளொருபாற் கருடரொரு
பாற் கிம்புருடர்க ளொருபாற் பெருங்கணவாசியர்க ளொருபாற்
கறைகொள் பைசாசரொருபாற் றரமொடுதுதிக்கநற் சேவைதரு
நின்பெருமை சாற்றரிது வேளூரில்வாழ் சையமால் வரைகுமரி
வையம் யாவையுமுதவு தையநாயகி கௌரியே. (10)

186235

நலமிகுவிளங்குசீ காழியிலுதித்த திருஞானசம்பந்தமூர்த்தி
நவிலரியமெய்ச்சிவா நந்தமேவத்துங் கநசமுலைப்பாலளித்த சலச
லோ சனபாலசுந்தரி மகாமந்த்ரதந் தரவெந்த்ராடம்பரி, சயில புப
மார்வைத்தியநாதர் பாரிபூந்தாரிபொய்யாரிவீரி, பலனுதவுநின்னு
டைய சாருப்யபத்தினிற்பரிவுடன் சாத்துமிந்தப், பாமாலையைப்
புனைந் தருள்செய்யவேண்டும் பவானியுயர்ஜெகதீஸ்வரி, தலைமை
பெறுமோங்காரி கருணைசமுத்ரியே தருபுகழ்கொள் வேளூரில்
வாழ் சையமால்வரைகுமரி வையம்யா வையுமுதவு தையநாயகி
கௌரியே. (11)

தையநாயகியம்மன்பேரில்பாடிய கட்டளைக்கலித்துறை.

கான்கொண்ட கற்பகக்காமலர் நின்பூங்கழற்கணிதம்
வான்கொண்டதேவர்களர்ச்சித்து வாழ்த்தவரமளிக்குந்
தேன்கொண்டமென்மொழிப் பாவாய்விதித்தவிச் சென்மத்தினில்
நான் கொண்ட சஞ்சலஞ்தீர்த்தருள்வாய் தையனாயகியே.

புற்றரவப்பணி வேணிப்பிரான் மும்புராதியரை
யுற்றநகைப்பி லெரித்தபிரான் ஞேனுரித்துடுக்குங்
கொற்றமிகு மெம்பிரான் யென்றுங்குலவுதற்கு
நற்றவமெத்தனை செய்தனளோ தையனாயகியே.

பொன்னேயப்பொன்னிறெளியே சகலபுவனத்திற்கும்
அன்னே யிறஞ்செயுமம்பிகையே யிருளற்றொளிரும்
மின்னேமாணிக்கமேமதி மாமுகவிந்தகிநீ
நன்னேசங்கொண்டெனை யாண்டருள்வாய் தையனாயகியே.

வைத்தீஸ்வரர்பேரில்பாடிய கட்டளைக்கலித்துறை.

மெய்யணிநீறொடுவெம்புலியாடைவிரிசடையும்
கையினின்மான்மழுவற்றுமையோடு கயிலைவிட்டு
வையம்புகழ்நல்லவேளூரில் வந்த வைத்தியநாதனே
தையம்மையார்ந்து முத்தையனையீன்ற தயாபரனே.

பானென்றுனையடைந்தேனைப்பிறவிப்பாவைனெறி
வரவைத்த[illegible]த்தருள் செய்திடும்வைத்தியநாதமன்னு
அரவின்பொறிப்பணமானுநிதம் பவரிவையர்க்கிங்
குருமுளத்தினனேனும் பிரப்பையின் றுத்தமனே.

உத்தமர்போற்றுன் பதந்தந்துகளுமுடலினிடை
யொத்துவருபிணியெல்லா மொழியவொளிரன்பினர்
பத்திபுரிந்து மெய்ஞ்ஞானவின்பத்தினைப் பற்றிநிற்கச்
சித்தம்வைத்தாள் தையனாயகிமதிடஞ் சேர்த்தவனே

சேர்ந்தவனேயுன்றன் சேவடிபோற்றுஞ் சிறியனெனைக்
காத்தவனே பனிமாமலையாளோடு கண்ணனையும்
ஆர்த்தவனே சர்வபூதகணநிபாஞ்சலிக்கப்
பார்த்தவனேமுப்புரமெரிந்தேவிடப் பண்ணவனே.

பண்ணவனே புவனங்களை முத்தற்பணியுமேற்றிக்
கண்ணவனே தையனாயகியாளெனுங் கருதிமையப்
பெண்ணவனே யம்பிரியாதவனே பெருமுலகை
யுண்ணவனே பணியையவெனக் கருளுத்தமனே.

உத்தமனேபர் சுந்தர் க்கரோடிலகிற்யாமாணி
சித்தமனே கஞ்சிகையா திருக்கச்யாறுபவம்
வைத்தமனே யெனுஞ்சம்பந்தர் பாடியவக்கதனுக்
கத்தமனே கங்கொடுத்தோ யெனக்கின்றருளுவையே.

வாழி.

நேரிசைவெண்பா.

சீர்வேளூர்வாழி திகழ்வைத்திய நாதனெழில்
வார்மேவுதையம்மை வாழியே-ஏற்மேவு
நான்மறையோர்வாழி நவின்மன்னர் செங்கோலுந்
தான் வாழி வாழி சுகம்.

கட்டளைக்கலித்துறை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

புள்ளிருக்கு வேளூர்

ஸ்ரீ முத்துக்குமரசாமி பதிகம்.

விநாயகர் துதி

காப்பு

வெண்பா

செனனமரணந்தீரும் செய்தவினையகற்றும்
மனனநெறிப்பயிற்றும் வாழ்கத்-தினமும்
விடமருந்துமீசன் விரும்பியருள்வேளூர்
குடவறை விநாயகனைக்கூறு.

ஆசிரிய விருத்தம்

சீர்கொண்ட மதிமௌனியான சற்குருவாய்ச் சிறந்தசங்கத் தலைவனுஞ், சித்தாந்தமுத்திமுதல் வற்றுப்பெருங்கருணைத்தெள்ள மூர்தவருத்தியுமா,யேர்கொண்டமயில்வாகனக் கடவுளாகியுமெழில்வேலுடைக்கடவுளாய் இபல்பாகவடியவரை ரெட்சித்திடச்சேவலேகரங்கொடிகொண்டதால், பார்கொண்ட மெய்ப்புகழ்சரவணபவாவென பற்றிபலர்நினைக்கின்றதால் பனிமுறுவல்நகையொளிருமாதிடம் வலம்கொண்ட பாங்கானகிருபாகா! மூர்கொண்டபுகழுளோ யென்கவியகற்றிடவுமொழிதந்து நீயுதவுவாய் முத்தமிழ்க்கிறைவ சங்கத்தமிழ்த்தலைவனே முத்திதருமுத்தையனே.

வேதவேதாந்தமுடிவான நிற்சோதிமய வெட்டவெளியான
துவு மெய்ப்பொருட்சரவணப வாயனேமெஞ்ஞான வேதமுடிவா,
னதுவுநீ நாதநாதாந்தமுடிவானநீ ஆறுதல்நாட்டநீ நடுவுநீயே
நாடுமேலாதாரதுரியங்கடந்ததோர்நாட்டமுளபரவெளியுநீபதமும்
பேதமும் பிரணவசொரூபமாய் பேச்சுமூச்சத்தவிடம்நீ பெரிதான
சைவசமயத்திநெறியானநீ பேரின்பசுகவாரிநீ, மூதண்டகூடத்து
ளொளிவான நான்குபத மோட்சத்தின்வழியும்நீயே, முத்தமிழ்க்
கிறைவசங்கத்தமிழ்த்தலைவனே முத்திதருமுத்தையனே.

எழுதாதபுத்தகம் பேசாதவெழுத்துமாய் எழில்பெருச்சூனி
யமதாய் எங்குநிறைகின்றபொருள் சமயங்கடந்தோரிரவுபகலற்ற
விடமாய், பழுதற விளங்குநற் பரவெளியிலொளியாகிபரி பூரணக்
கடலதாய் பார்க்குமிடமெங்குநின்மயமாகவே நிறைபதியில்பலவுரு
வாகியும், தொழுதுபலவிதமாகவறியோர்கள்பல முறைத்தோற்
றத்தி னிறைவானநீ, தூய்காமைகல்விபொருதுணிவுடைமையிம்
மூன்றும்தோதாயமர்ந்தெங்கும், முழுதுநிறையண்டப் பரப்
பெலாம்நிறைகின்றமூர்த்தியே கீர்த்திமுதலேமுத்தமிழ்க்கிறைவ
சங்கத்தமிழ்த்தலைவனேமுத்திதரு முத்தையனே. (3)

பொய்களவுகொலையுரு மனதாக்கியென்னையும் புனிதனென
வடிமைகொண்டும், புகலுமுன்னூழினைப் பொடியாக்கியன்ப
னென்ன போதகத்தருள்புரியவும், மெய்யைவலுவாகவேநின்பதத்
தறியவுமேதினியிலேசெனனமாய், மிகவும்பிறந்துமிறவாதபடிபே
ரின்ப மெய்மையைவிளக்கவருவாய், ஐயமிட்டுண்டுபலருக்கு முப
காரனுயாக்குவாயன்புவைத்து, அங்குமேபுகழ்பெறத் திங்குளார்பு
கழவருளற்புதபரஞ்சோதியே, பொய்குழலினுளிடஞ்சேர்ந்துவுற
வாடினுமுற்றுநின்னுடைமையலவா, முத்தமிழ்க்கிறைவசங்கத்
தமிழ்த்தலைவனேமுத்திதரு முத்தையனே, (4)

வறுமைநோய்த்தீர்த்திடவும் வகைகளறியாதவன் வைத்திய
னெனும்பேருளான், வடிவமதையெவர்புகழ்மாசனத்தினிச்சை
வழக்கவேதாமுளவாசிறுமையென்பதையெணைமற் பிச்சைவாங்கி
சையுமனமலவேனின்சித்தமுமறியாததோ, மறுமையுடனிம்மை
யிற்றருமமும்பொருளின்பமார்க்கமுமிகத்திலுளதால் வழங்கல்நின்
னடியார்க்கு முந்தனுக்குமுதவ மகிழுளன்மனவுமறியாய், முறுவ

விலன்னிகை மாதுயிச்சைகிறியாச் சத்திமுறைமையிருபாதமைத்த முத்தமிழ்க் கிறைவசங் கத்தமிழ்த் தலைவனே முத்திதரு முத்தை யனே. (6)

நிற்குணநிரஞ்சனமு நிஷ்களங்கமுமிலா நிற்கவிகற்பமுமிலாமல், நின்றுதிமூலமாய்காரணப்பொருளாகிநீதமாய்நின்றவெளியே சற்சனசன்மார்க்கமொடு சாலோகசாமீப சாரூப சாமீபசாயுச்சிய முஞ் சாசனம்பெறுமன்பர்தற்பரானந்தமயசாசுவதநீயருள்குவாய் உற்பனமிகுத்துளருச்சிதப்பொருளாகியுடலினுயிரளவாகியும், உம்பர்புகழின்பவெளி யம்பரம தானநிறை யற்பவக் கருணைவாழ்வே, முற்பவமருந்துவள ரிப்புவியில் யார்புகழும்பை வைத்தருள்செய் குகனே, முத்தமிழ்க் கிறைவசங் கத்தமிழ்த் தலைவனே முத்திதரு முத்தையனே. (6)

பத்திக்கிசைந்திடாபாவியேனேயிடினும் பட்சம்வைத் தென்னையாள, பதிபுகழவேயன்னையீன்றிடுஞ்சேயிலொரு பதகனுனுனக்கு, வெத்தியாய்பலவுநீவியாபகம் வையாவிடில் விண்ணுளோருனையிகழுவார், மெய்மையாய்க்கொண்டுநின் னன்புதைத்தே யென்னை வெறுக்காதுமவைகண்டிட, நத்திடுமின்மையிற்மாறிடாதுவன் னுட்டமுமுனக்குளதே நானெனக் குளறுவது நீயன்றி வேறிலை ஞாயமோவறுமையுறுதல், முத்திக்குவித்தாய் முளைத்திடுஞ் சோதியே மூர்த்தியேகீர்த்திமுதலே, முத்தமிழ்க் கிறைவசங் கத்தமிழ்த் தலைவனே முத்திதருமுத்தையனே, (7)

என்சொலைக்கேட்டுநெஞ்சிரக்கம்வையாவிடி லேழையேற்காருதவுவா ரிட்டமித்திராளொடுஞ் சுத்தமுறவாழ்வுநீ யெந்தைநீ யன்னைநீயே, தன்சொல்மனைவியுமருள்பிள்ளைநீ யுருவுநீ தன்னுடலுயிர்த்துணையுநீ சாசுவதப்பொருளுநீ யாவுநீ சட்சமய சாங்கநீ சகலநீயே, புன்சொலாயிடினுமது நற்சொலாய்ச் செவிகொண்டு பூரணகடாட்சம் வைத்து பூவுலகிலேயெவர்களும் மதிக்காவிடில் பொன்னுலகி லெவர்மதிப்பார், முன்சொலன்பர்களிச்சை யாவு முதவுன்கருவின் முக்கட்சுடர்க்கொழுந்தே, முத்தமிழ்க் கிறைவ சங்கத்தமிழ்த்தலைவனே முத்திதரு முத்தையனே. (8)

இனிநானுனக்கெவ்வி தஞ்சொல்வேன் யேழையே னெந்தையே னுந்தனுக்கு, யிசையவேகொண்டென்னை யான்றிடுங் கருணைரச யின்பத்திலுள்ளநிறைவே தனிநானெச்சொலேன் சட்சமய கோளரித்தாருதேசங்கருருவே, தாவித்துவுடலாவி யுயிருனக்கே தந்து சகலமுமளித்தபோதே, கனிவாயிதழ்க்கஞ்சி கானகந்தனிலோல காருண்யவுதவிநீயே, காத்தலுமுனக்கபயமெவ்விதஞ்செய்யினும் கவலையைநினைந்துகொள்ளேன் முனிவரது துதிகொண்ட தனிமுதலுமானநின் மொழியையு மறக்காதருண், முத்தமிழ்க்கிறைவசங் கத்தமிழ்த் தலைவனே முத்திதருமுத்தையனே. (9)

மெத்தப்படித்தவன் போலுநான்பலதமிழை வினவினேனுன் கருணையால், வீணனுப்பலரையுந் துதியாமல்நின்னையே மெய்மையாகத்துதித்தேன், சித்தமுறவேகொண்டு நற்கருணைசெய்திடுஞ் செல்வச்செருக்குநடுவே, செந்தமிழ்க்கிறைவனே வந்தனஞ் செய்துநான்! செப்பினேனைப்பாவிடில், பெத்தவ டனக்குவருள் பிள்ளைகொச்சைச்சொலைப் பேணுவாரின்பமாய்க்கொள், பெரிதான வாருதிச்சலதாரை புலநீர்கள் சேர்த்திடுதல் நலமென்னவே, மொத்தமனுவின்மலைக ளெங்கும்வியாபகமுள்ள வேலவா வேளூர்வளர் முத்தமிழ்க்கிறைவசங் கத்தமிழ்த்தலைவனே முத்திதரு முத்தையனே. (10)

வெண்பா.

செந்தூர்திருப்பழனிச்சேர்பரங்குன்றேகரமு
முந்தூர்பழமாமுதிர்சோலை — கந்தபுரி
குன்றுதோறாடுங்குமரவேள்தாடதனை
என்றுமறவாதிரு.

வேலுமயிலுந்துணை.

முற்றிற்று.

ஸ்ரீ வேலன்பிரஸ்,
சிதம்பரம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186235